09380

Question Paper Sl. No.

4364

Register Number

Part III

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். 50 × 1 = 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்

அ) மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித்

இ) இலயனல் ராபின்ஸ் ஈ) சாமுவேல்சன்.

2. சமதர்மப் பொருளாதாரத்தில் உற்பத்தி, பகிர்வு மற்றும் தீர்வுகளை முடிவு செய்வது

அ) சந்தை ஆ) மத்திய திட்டக்குழு

இ) மரபுகள் ஈ) தனியார் துறை.

3. பயன்பாடு என்பது

அ) சமூகக் கருத்து

ஆ) பொருள் / உளவியல் கருத்து

இ) அரசின் கருத்து

ஈ) அறிவியல் கருத்து

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



4. பண்டத்திற்கான தேவை இதனைச் சார்ந்தது

அ) பண்டத்தின் விலை

ஆ) சார்ந்த பண்டங்களின் விலை

இ) வருமானம்

ஈ) இவை அனைத்தும்.

5. தேவையின் அதிகரிப்பை எதன் மூலம் காணலாம் ?

அ) ஒரே தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல்

ஆ) தேவை வளைகோடு இடம் பெயர்வது

இ) தேவை வளைகோட்டின் உச்சப்புள்ளி

ஈ) தேவை வளைகோட்டின் கீழ்புள்ளி.

6. சமநிலை விலைக்கும் மேல்

அ) S < D ஆ) S > D

இ) S = D ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

7. உழைப்பை பிரிக்க முடியாது

அ) முதலிடமிருந்து ஆ) உழைப்பாளரிடமிருந்து

இ) இலாபத்திடமிருந்து ஈ) அமைப்பிடமிருந்து.

8. சமூகச் செலவு என்பவை

அ) நிறுவனங்கள் ஏற்றுக் கொள்வதில்லை

ஆ) சமுதாயம் ஏற்கும் செலவு

இ) உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பது

ஈ) இவை அனைத்தும்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

9. நிறைவுப் போட்டி அங்காடியில் காணப்படும் நிலை

அ) ஒரே விற்பனையாளர் ஆ) இரு விற்பனையாளர்கள்

இ) எண்ணற்ற விற்பனையாளர்கள் ஈ) சில விற்பனையாளர்கள்.

10. வாரம் என்பது இதனுள் ஒன்றைப் பயன்படுத்தியதற்காகக் கொடுக்கப்படும் விலை

அ) மூலதனம் ஆ) அமைப்பு

இ) நிலம் ஈ) உழைப்பு.

11. பேரியல் பொருளாதாரத்தின் மையப் பிரச்சினை

அ) வருமானமும் வேலை வாய்ப்பும் ஆ) விலையும் வெளியீடும்

இ) வட்டியும் பணமும் ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

12. இறுதிநிலை நுகர்வு நாட்டம்

அ) $\frac{\Delta S}{\Delta Y}$ ஆ) $\frac{C}{Y}$

இ) $\frac{\Delta P}{\Delta Q}$ ஈ) $\frac{\Delta C}{\Delta Y}$.

13. பொதுமக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது

அ) $M_1$ ஆ) $M_2$

இ) $M_3$ ஈ) $M_4$.

14. கூட்டாட்சி குடியரசு இதனைக் கொண்டது

அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

ஆ) மைய மற்றும் மாநில அரசுகள்

இ) மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

ஈ) இவை அனைத்தும்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. பண்டங்களுக்கு, பண்டங்களை மாற்றிக் கொள்வது ........................ ஆகும்.

16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ........................ எனவும் அழைக்கப்படுகிறது.

17. ........................ என்பது பண்டங்களை, பணிகளை பயன்படுத்துவதாகும்.

18. தனிநபர் நுகர்வு அட்டவணைகளை ஒன்று சேர்க்கும்போது ........................ ஆகும்.

19. அங்காடிக்காலத்தில் அளிப்புக்கோடு ........................ .

20. ........................ என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும்.

21. இறுதிநிலை செலவு வளைகோடு ........................ வடிவத்தில் இருக்கும்.

22. ஒரு நிறுவனத்தின் சராசரி வருவாய் சராசரி செலவை விட அதிகமாக இருப்பின் அந்நிறுவனம் ........................ ஈட்டும்.

23. அமைப்பை ஏற்படுத்துபவர் ........................ .

24. ........................ என்பது மக்களின் கையிருப்பு ( ரொக்கம் ) பணம் ஆகும்.

25. பணவாட்டம் என்பது விலைகள் ........................ குறிக்கும்.

26. வரி விதிப்பின் அடிப்படைக் கோட்பாட்டை ........................ என்கிறோம்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 × 1 = 12

| | |
|---|---|
| 27. செல்வம் | அ) தங்கம் மற்றும் வெள்ளி |
| 28. குறைந்தபட்ச உற்பத்திச்செலவு | ஆ) ஹாலே |
| 29. அதிகபட்ச சமுதாய நன்மைகள் | இ) $C + I + G + (X - M)$ |
| 30. குறுக்குத்தேவை நெகழ்ச்சி பூஜ்ஜியம் | ஈ) மார்ஷல் |
| 31. கழிவு விலை/தள்ளுபடி விலை | உ) சிறந்த வரிமுறை |
| 32. இடர்பாடுகளின் தொகுப்பு | ஊ) அதிகபட்ச நன்மை |
| 33. இலாபம் | எ) ஆண்டு இருப்பை விற்றுத்தீர்க்க |
| 34. உலக அங்காடி | ஏ) பணத்தின் வாங்கும் சக்தி |
| 35. காத்திருத்தல் வட்டிக்கோட்பாடு | ஐ) ஹிக்ஷ் மற்றும் டால்டன் |
| 36. ஒட்டு மொத்தத் தேவை | ஒ) இருப்பு |
| 37. பணத்தின் மதிப்பு | ஓ) $X$ பண்டம் மற்றும் $Y$ பண்டம் உறவற்றவை |
| 38. வளர்விகித வரி | ஔ) $TR - TC$. |

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக: 12 × 1 = 12

39. இலவச பண்டங்களுக்கு ஓரிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

40. பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இரண்டு நாடுகளைக் கூறுக.

41. நிதிநிலை கோட்டிற்கு மற்றொரு பெயர் என்ன ?

42. புள்ளி முறையின் வாய்பாடு என்ன ?

43. நிலையான முதலீட்டிற்கு ஒரு உதாரணம் எழுதுக.

44. சமுதாய மாற்றம்காணும் முகவர் யார் ?

45. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன ?

46. பொதுப் பயன்பாடுகளை அனுபவிப்பவர் யார் ?

47. இலாப-வாரக் கோட்பாட்டின் ஆசிரியர் யார் ?

48. பெருக்கியின் வாய்பாட்டை எழுதுக.

49. மிகைவேக பணவீக்கத்தினை சந்தித்த ஒரு நாடு எது ?

50. VAT என்பதன் விரிவாக்கம் யாது ?

## பகுதி - ஆ

V. *குறிப்பு :* i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைந்திட வேண்டும். 10 × 3 = 30

51. பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம் யாது ?

52. எந்த சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் யாவை ?

53. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ?

54. மார்ஷலின் கூற்றுப்படி, நுகர்வோர் உபரியைக் கூறுக.

55. தேவைக்கோடு ஏன் கீழ் நோக்கி வருகிறது ?

56. அங்காடிக் காலம் - சிறுகுறிப்பு வரைக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



57. சமநிலை விலை என்றால் என்ன ?

58. உழைப்பு என்பது யாது ?

59. மூலதனத்தின் வடிவங்கள் யாவை ?

60. பொருளாதாரச் செலவு என்றால் என்ன ?

61. இறுதிநிலைச் செலவு - குறிப்பு வரைக.

62. நீர்மை விருப்பக்கோட்பாட்டின் மூன்று நோக்கங்கள் யாவை ?

63. சந்தை விதியின் எடுகோள்கள் யாவை ?

64. பணக்கொள்கையின் இலக்கணம் கூறுக.

65. பூஜ்ஜிய ( Zero-Budget ) நிதிநிலை அறிக்கை என்றால் என்ன ?

## பகுதி - இ

VI. *குறிப்பு :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவில் அமைத்திட வேண்டும்.

6 × 10 = 60

66. பழமைப் பொருளாதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.

67. நீண்டகால தட்டை அளிப்புக் கோட்டை விளக்குக.

68. வேலைபகுப்பு முறையின் சிறப்புகளையும், குறைகளையும் கூறுக.

69. நீண்ட கால சராசரிச் செலவு வளைகோடு பற்றி குறிப்பு வரைக.

70. SAC மற்றும் SMC-க்கும் உள்ள உறவினைக் கூறுக.

71. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை ?

72. நுகர்வைத் தீர்மானிக்கும் வருமானம் தவிர பிறகாரணிகளைக் கூறு.

73. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக.

74. மத்திய அரசின் முக்கிய வரிவருவாய் மற்றும் வரியற்ற வருவாய் பற்றிக் கூறுக.

75. நேர்முக வரி மற்றும் மறைமுக வரியை வேறுபடுத்திக் காட்டுக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஈ

VII. குறிப்பு : i) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் மூன்று பக்க அளவில் அமைத்திட வேண்டும்.

3 × 20 = 60

76. பொருளாதாரம் பிற சமூக இயல்களுடன் உள்ள தொடர்பினை விவாதிக்க.

77. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை ?

78. தேவை விதியினை படத்துடன் விளக்குக.

79. குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன ?

80. கீன்ஸின் வட்டிக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.

81. பணக் கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers